பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 16 வியாழக்கிழமை 02.12.2021 கதிர் 27

### இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு வரும் 18 அல்லது 19ஆம் திகதி வவுனியாவில் கூடும் எனத் தெரிகின்றது.

இந்த மத்திய குழுவில் கட்சியின் அடுத்த - அதாவது 17ஆவது - தேசிய மாநாட்டை எப்போது கூட்டுவது என்பது குறித்து பக்கம்02 »

# புதுடில்லி பறந்தார் பஸில்!

## நிதியமைச்சருடன் நேற்று பேச்சு மோடியை இன்று சந்திக்கின்றார்

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இந்திய நிதி அமைச்சர் எஸ்.நிர்மலா சீதாராமனை நேற்று புதுடில்லியில் சந்தித்தார். ☞2



## தாக்கப்பட்ட ஊடகருக்கு நீதி கிடைக்க வேண்டும்

### அரசிடம் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை



முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இது தொடர்பாக சுயாதீனமான விசாரணைகள் ☞9

## தலைமன்னார் துறை அ.த.க. பாடசாலை மாணவர்கள் 12 பேருக்குக் கொரோனா!

(ந.லோகதயாளன்)

தலைமன்னார் துறை அரசினர்தமிழ்கலவன்பாடசாலையில் கல்வி கற்கும் 12 மாணவர்கள் உட்பட 15 பேருக்கு நேற்று மாலை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலைமன்னார் வைத்தியசாலையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளடங்களாக 50 பேருக்கு நேற்று பி.சி.ஆர். ☞2

## வவுனியாவில் காணிச் சண்டையில் 3 பெண்கள் உட்பட நால்வர் காயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் காணித் தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் மூன்று பெண்கள் உட்பட 4 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கூமாங்குளம், முருகையா குளத்துக்குச் செல்லும் வீதியில் குடும்பம் ஒன்று வசித்து வரும் காணிக்குள் ☞2

### யாழ்.பல்கலை மாணவர்கள்

## 50 பேருக்கு மாதாந்தம் 5,000 ரூபா

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பயிலும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு எம். எம் பவுண்டேசன் ☞9

## இலங்கையின் வீழ்ச்சிக்கு கட்சி அரசியலே காரணம்!

### அர்ஜுன ரணதுங்க சுட்டிக்காட்டு

கட்சி அரசியலே நாட்டை வீழ்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது. ஒவ்வொரு கட்சிகளிலும் ஒவ்வொரு கொள்கை பின்பற்றப்படுகின்றது. எதிர்காலத்தில் கட்சி அரசியல் பேதமின்றி, நாட்டின் நலன் கருதி செயற்பட நான் தயாராகவுள்ளேன். ☞2



## யாழ். பல்கலை ஊழியர் சங்கமும் மௌன தொழிற்சங்கப் போராட்டம்

யாழ்ப்பாணம் பல்பகலைக் கழக ஊழியர் சங்கமும் இன்று மௌன தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது என அதன் தலைவர் த.சிவரூபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டுக் குழுவின் தீர்மானத்துக்கமைய நீண்டகாலமாக நிலவி வரும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய பிரச்சினைகள் ☞2

### கோட்டா தலைமையிலான ஆட்சியில்

## சமையல் அறைக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை

### அநுரகுமார எம்.பி. குற்றச்சாட்டு



தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன் எனக் கூறியே கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். ஆனால், இன்று வீட்டுக்குள் சமையல் அறைக்குக் கூடப் பாதுகாப்பாக சென்றுவர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று ☞2

## நேற்று 744 பேருக்கு கொரோனா உறுதி

இலங்கையில் நேற்று 744 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 64 ஆயிரத்து 733 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 396 பேர் நேற்று ☞2

## நிலத்தைப் பறிப்பதும் எமது உயிரைப் பறிப்பதும் ஒன்றே

### யாழில் வடக்கு ஆளுநருக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராட்டம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

காணி அளவீட்டுப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக நடந்து கொள்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கூறியதாக வெளியான செய்தியை அடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள ☞2

## மேலும் 26 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 26 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 15 பெண்களும் உள்ளடங்குகின்றனர்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆராய்ந்து முடிவெடுப்படலாம் எனத் தெரிகின்றது.

2012 மே 27ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற 14ஆவது தேசிய மாநாட்டில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இரா.சம்பந்தன், கட்சியின் யாப்பு விதிகளின்படி சரியாக இரண்டு வருடங்களில் 2014 செப்ரெம்பர் 5, 6, 7ஆம் திகதிகளில் 15ஆவது தேசிய மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டில் முதல்தடவையாக மாவை சேனாதிராசா கட்சியின் தலைவரானார்.

ஆனால், பின்னர் ஐந்து ஆண்டுகள் கழித்துத்தான் – 2019 ஜூன் 28, 29, 30 இல்தான் – 16ஆவது தேசிய மாநாட்டை அவர் கூட்டினார். அதிலும் மீளவும் அவரே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அந்த மாநாடு கூட்டி இரண்டரை வருடங்களாகுகின்றன. இன்னும் அடுத்த மாநாடு கூட்டப்படவில்லை. இம்முறை தாமதத்துக்கு கொரோனா நெருக்கடியைக் காட்ட முடியும்.

தேசிய மாநாட்டை நடத்துவதானால் மாவட்டக் கிளைகள் புனரமைக்கப்பட்டிருக்க வேண்டும். மூலக்கிளைகள், வட்டாரக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளை என்ற ஒழுங்கில் புனரமைக்கப்பட்டு, அதனடிப்படையில் தேசிய மாநாட்டுக்குப் பிரதிநிதிகள் பிரசன்னமாவர்.

இந்த விடயத்தில் கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்கள் தமது கிளைப் புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்துவிட்டன. முல்லைத்தீவு மாவட்டத்திலும், யாழ்.மாவட்டத்தில் பகுதியாகவும் கிளைகள் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகவில்லை. அங்கு பழைய பிரதிநிதிகளுடன் தேசிய மாநாட்டை நடத்துவதா என்பது குறித்து தமிழரசு மத்திய குழு கூடித் தீர்மானிக்கும் எனத் தெரிகின்றது.

மத்திய குழுவின் கூட்டத்துக்குத் தலைவர் மாவை சேனாதிராசா அழைக்கும் சிறப்பு அழைப்பாளர்கள் உட்பட 52 பேர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த தடவையும் மத்திய குழு வவுனியாவில் கூடியது. அதில் ஆக 32 பேரே சமுகம் தந்தனர். கிழக்கில் இருந்து பலர் வரவில்லை – கொரோனா நெருக்கடி காரணமாக.

ஆனால், இம்முறைக் கூட்டத்துக்கு முழு அளவில் பிரசன்னம் இருக்கும் என நம்பப்படுகின்றது.

இம்முறை மத்திய குழுவின் விவாதத்துக்கு சூடான பல விடயங்கள் காத்திருக்கின்றன. பொறி கிளம்பும். பொறுத்திருந்து பார்ப்போம்.

★ ★ ★

நல்லை நகர் நாவலரின் இருநூறாவது ஆண்டு நிகழ்வுகள் வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

1822 ஆம் ஆண்டு டிசெம்பர் 18ஆம் திகதி நாவலர் பிறந்தார். அவரது இருநூறாவது ஆண்டுக்கான அனுஷ்டானங்கள் வரும் 18ஆம் திகதி தொடங்குவதை ஒட்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சு தடல்புடல் ஏற்பாடுகளைச் செய்வதாக ஒரு தகவல் கிட்டியது.

சைவ மறுமலர்ச்சியின் தந்தையான நாவலர் பெருமானின் இருநூறாவது ஆண்டை ஒட்டி இலங்கை அரசின் ஏற்பாட்டில் ஒரு பெரிய விழா எடுப்பதற்கும், வரப்போகின்ற ஆண்டை 'நாவலர் ஆண்டாக' பிரகடனப்படுத்தவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தயாராக இருக்கின்றார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிக்கின்றார்.

இந்து சமய, கலாசார அலுவலர்கள் திணைக்களமும் ஜரூராக – ஆரவாரமாக – நடவடிக்கை எடுக்கின்றது. மகிழ்ச்சிக்குரிய விடயம்தான். என்ன இந்த மாற்றம் என்று தேடினேன். நெருப்பில்லாமல் புகையாதே...! இந்த மாற்றத்துக்குக் காரணம் உண்டு.

இந்து சமய, கலாசார விவகாரம் தனியான அமைச்சாக செ.இராஜதுரையின் கீழும், பின்னர் தி.மகேஸ்வரனின் கீழும், தொடர்ந்து டி.எம்.சுவாமிநாதனின் கீழும் இயங்கிய போது இது போன்ற எழுச்சி இருந்தது.

இப்போது அது, தனித் திணைக்களமாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ். அப்படி இருக்கையில் இப்படி மாற்றம் எவ்வாறு சாத்தியம்?

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது அரசின் வடக்கு, கிழக்கு மீள்குடியேற்ற இணைப்பாளரும், தமது இணைப்புச் செயலாளருமான கீதநாத் காசிலிங்கத்தை தமக்குக் கீழ் இருக்கும் இந்து, சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தை தனது பிரதிநிதியாக வழி நடத்தும் முழு அதிகாரத்துடன் நியமித்திருக்கின்றார் என்று தெரிகிறது. அதுதான் இந்த மாற்றம். மீண்டும் முழு அளவில் தமிழ், சைவர் ஒருவரினால் அரசியல் அதிகாரத்தோடு அத்திணைக்களம் வழி நடத்தப்படும் நிலைமை ஏற்பட்டமைதான் இந்த மாற்றத்துக்குக் காரணம்.

அண்மையில் பிரதமரும் பாரியாரும் தமிழ் சிறுவர், சிறுமியரோடு ஒருங்கு சேர்ந்து தீபத் திருநாளான தீபாவளியை கொண்டாடியமையின் பின்புலமும் இதுதான்.

இந்து, சமய கலாசார விடயங்கள், பிரச்சினைகளை நேரில் முறையிட்டுத் தீர்த்துக் கொள்ள அரசியல் பிரதிநிதித்துவத் தரப்பு ஒன்று இருப்பது நல்லது தானே...!

– மின்னல் –

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அஸ்கிரிய மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரிடம் ஆசீர்வாதம் பெற்ற தன் பின்னர், ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தாம் அனைத்து கட்சிகளிலும் அங்கம் வகித்ததாக எனவும் தற்போது கட்சி அரசியலில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நுழைந்து அடாத்தாக கொட்டகை ஒன்றை போடுவதற்குச் சிலர் முயன்றனர். இதனை குறித்த காணியில் வசித்து வந்தோர் தடுத்து நிறுத்த முற்பட்டபோது வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன், தடுக்கச் சென்றவர்கள் மீது அங்கு வந்தவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனப் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த தாக்குதலில் தாய், பிள்ளைகள் என மூன்று பெண்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த காணி தொடர்பில் கடந்த சில மாதங்களாக ஒருவர் பிணக்கில் ஈடுபட்டார் எனவும், அவருக்கு ஆதரவாக வருகை தந்த சிலர் அத்துமீறி கொட்டகை அமைக்க முயன்றமையுடன், தாக்குதலும் நடத்தியுள்ளனர் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## நேற்று 744...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 783 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு 23.11.2021 வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மேற்படி அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

அந்தவகையில் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழுவில் அங்கம் வகிக்கின்ற எமது பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இன்று (02.12.2021) நண்பகல் 12 மணிக்கு மேற்படிப் போராட்டத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றிலில் கொரோனா சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்து முன்னெடுக்கவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

எனவே, சகல கல்விசாரா ஊழியர்களையும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு உரிமையுடன் அழைக்கின்றோம் – என்றுள்ளது. (100)

## தலைமன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது தலைமன்னார் துறை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 12 மாணவர்கள், 3 பெற்றோர்கள் உள்ளடங்களாக 15 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர் ஒருவருக்கு தலை மன்னார் வைத்தியசாலையில் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் குறித்த மாணவருடன் தொடர்புடைய மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போதே பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக 15 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட மாணவர்களுடன் தொடர்புடைய மாணவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

## புதுடில்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இலங்கையின் பொருளாதார ஒத்துழைப்புக்கு, இந்தியா வழங்கி வரும் உதவிகளுக்கு, பஸில் ராஜபக்ஷ தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்திய நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கை நிதி அமைச்சின் செயலாளர் ஆட்டிகல, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

பஸில் ராஜபக்ஷ, இந்திய பிரதமர் நரேந்திர மோடியை இன்று சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமையல் அறைக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் மத்தியில் தற்போது உருவாகியுள்ள அச்சம் நீக்கப்பட வேண்டும். அதற்காக அரசு துரிதமாகச் செயற்பட வேண்டும். மாறாக குழுக்களை நியமித்து காலத்தை இழுத்தடிக்கக்கூடாது – என்றார்.

## நிலத்தைப் பறிப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆளுநர் அலுவலகம் முன்பாக எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்று காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலத்தைப் பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே, எமது நிலம் எமக்கு வேண்டும், காணிகளை சுவீகரிக்காதே, ஆளுநரே காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே போன்ற பல்வேறு கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

போராட்டம் நடைபெற்ற அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## மேலும் 26 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 372 ஆக அதிகரித்துள்ளது.




JSAC

16 2021

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"கல்வி மனித உரிமை. அதில் ஆண் பெண் பேதம் ஆகாது.
சகலருக்கும் கல்வி சமத்துவமாய் வழங்குவோம்."

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

# வீடுகளுக்குள் புகுந்தது மழை வெள்ள நீர் வவுனியா தெற்கு பிரதேச சபை அசமந்தம்

## மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வீடுகளுக்குள் புகுந்த வெள்ள நீர் தொடர்பில் வவுனியா தெற்கு பிரதேச சபைக்கு அறிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்துவந்த மழைகாரணமாக உக்குளாங்குளம் பகுதியில் சில வீடுகளுக்குள்ளும், வீட்டு வளவுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்தமையால் அங்கு வசித்து வந்த மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி இருந்தனர்.

அந்தப் பகுதியில் வீதி திருந்த வேலையின்போது சரியான வடிகால் கட்டமைப்பை கவனிக்காது வீதி புனரமைக்கப்பட்டமை காரணமாகவே தமது வீடுகளுக்குள் வெள்ளம் வந்துள்ளதாகவும் அப் பகுதி பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா தெற்கு பிரதேச சபை தலைவருக்குத் தெரியப்படுத்தி, உடனடியாக வெள்ள நீரை வழிந்தோடும் வகையில் வெட்டி அகற்றி விடுமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரியிருந்தனர்.

உடனடியாக ஒருவரை அனுப்பி அதனை செய்கிறேன் என பிரதேச சபை தவி சாளர் உறுதியளித்த போதும் ஐந்து நாள்கள் கடந்த போதும், இதுவரை வெள்ள நீர் வெளியேற்றப்படாமையால் அம்மக்களின் வீட்டு வளவுக்குள் தொடர்ந்தும் வெள்ள நீர் காணப்படுகின்றது.

இது தொடர்பில் பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைதவிசாளர்எஸ்.யோகராசாவைதொடர்பு கொண்ட போதும், அவரது தொலைபேசியில் இருந்து பதில் கிடைக்கவில்லை.

இதனையடுத்து வவுனியா தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர் இ.விக்டர் ராயை தொடர்பு கொண்டு கேட்ட போது –

கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு தொடர்பாக உக்குளாங்குளம், கூமாங்குளம் பகுதியிலிருந்து எமக்கும் முறைப்பாடு கிடைத்தது.

நான் உடனடியாக சில பகுதிகளுக்குச் சென்று வெள்ள நிலைமையைப் பார்வையிட்டதுடன், தவிசாளரிடம் ஜேசிபி இயந்திரத்தை வழங்குமாறு அல்லது அதனை அனுப்பி நீரை வெளியேற்றுமாறும் கோரியிருந்தேன்.

சிலமணித்தியாலத்திற்குள்செய்கிறேன் என தவிசாளர் தெரிவித்த போதும், இது வரை அந்தப் பகுதிக்குச் சென்று அவர் பார்வை யிடக் கூட இல்லை. நான் சில பகுதிகளில் மக்களின் மண்வெட்டிகளைப் பெற்று நீரை வெளியேற்றி இருந்தேன்.

அவர்களது அவசர நிலையில் உதவாது விட்டமை தவறு எனவும், இது தொடர்பில் சபை அமர்வின் போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

யாழ். கலாலயா பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே! மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers). -
உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளை அகற்றுதல் (Waxing)
கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர், குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.
பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களை காலை 9.00 மணிமுதல் 5.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.12.2021 ஞாயிறு காலை 10.00
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
06.12.2021 திங்கள் காலை 10.00 மணி
- இயக்குநர் -

# பெறுகை அறிவித்தல்
# தனியார் பாதுகாப்புச் சேவை
# பருத்தித்துறை நகரசபை

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- **2021.12.02 - 2021.12.15 வரை மு.ப 9.30 - பி.ப 3.00 மணி வரை**

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- **2021.12.16 பி.ப 3.00 மணி வரை**

கேள்வி திறக்கும் திகதி :- **2021.12.16 பி.ப 3.00 மணி**

கேள்வி திறக்கப்படும் இடம் :- **பருத்தித்துறை நகரசபை**

01. பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. சேவைவழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
03. மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக) இனைச் செலுத்துவதுடன் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா5,000.00 இனை பணமாகச் அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
04. கேள்விப் பத்திர ஆவணங்கள் 2021.12.16ஆந் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு **தவிசாளர், பருத்தித்துறை நகரசபை, கல்லூரி வீதி, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தினுள் உள்ள பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
05. கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும். அதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
06. கேள்விப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் மேல்மூலையில் மூலப் பிரதி,இணைப்பிரதி எனக் குறிப்பிடப்படுவதுடன் கேள்வியின் பெயரும் குறிப்பிடுதல் வேண்டும்
07. கேள்விப் பத்திரங்கள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக் குழுத் தலைவருக்கே உரியதாகும்.
08. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அலுவலக தொலைபேசி இல:- 0212263213) இல பாதுகாப்புச் சேவை தேவைப்படும்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | வேண்டப்படும் பாதுகாப்புப் பிணை | |
|---|---|---|---|---|
| | | பகல், இரவு | பாதுகாப்புப் பிணைத் தொகை (மீளளிக்கக் கூடியது) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை நவீன சந்தைக் கடைத்தொகுதியும் மரக்கறிச் சந்தையும் | 02 (இரண்டு மட்டும்) | 5,000.00 | 60 நாட்கள் |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகரசபை.

02.12.2021

மருந்தியலாளர் ( PHARMACIST) வேலைவாய்ப்பிற்கான கற்கைநெறி ஆரம்பம்
தற்போது "மருந்தாளர்" வேலை என்பது மிகவும் அனைவருக்கும் வேண்டப்பட்ட தொழிலாக அமைந்துள்ளது. எங்கிருந்தாலும் இவ் கற்கைநெறியை கற்கலாம் என்பதற்கு அமைய EXTERNAL PHARMACIST பரீட்சைக்கு தயார் படுத்தும் ONLINE வகுப்புகள் மூலம் இணைந்து கொள்ளலாம்.
இப் பரீட்சை கொழும்பு மருத்துவ பீடத்தினால் வருடந்தோறும் நடாத்தப் படுகின்றது. இவ்வாண்டுக்குரிய EXTERNAL PHARMACIST EXAM 11. 12. 2021 திகதி நடைபெறவுள்ளது.
✔ GCE OL ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி
✔ GCE AL இரசாயன பாடம் உட்பட விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சாதாரண சித்திகளுடன்
◆ வயது கட்டுபாடு இன்றி விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பித்து இரண்டு வருட காலப்பகுதியின் பின்னர் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து மருந்தாளராக பதிவு செய்த பிற்பாடு மாத வருமானம் ரூபா 50,000 இற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ள முடியும்.
◆ வெளிமாவட்ட பரீட்சாத்திகளின் நன்மை கருதி சனி, ஞாயிற்று கிழமைகளில் மாலை 6.30 - இரவு 9.30 மணி வரை Online வகுப்புக்கள் மார்கழி மாதம் 04.12.2021 ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.
◆ இவ் கற்கைநெறியானது இல 464, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரியில் சனி, ஞாயிற்று கிழமைகளில் (வெளிவாரிபட்டப்படிப்பு) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நேரடி வகுப்புக்கள் மூலம் ( Personal class ) 02.01.2022 திகதியில் இருந்து ஆரம்பமாகவுள்ளது .
◆ "CERTIFICATE IN PHARMACY" என்னும் ஆறு மாத கற்கைநெறி Online வகுப்புக்கள் மூலம் திங்கட்கிழமைகளில் இரவு நேரத்திலும், நேரடி வகுப்புக்கள் ( Personal classes ) யாழ்ப்பாண கல்லூரியில் பி.ப 1 மணி - 3 மணி வரை நடாத்தவுள்ளோம். இதற்கான குறைந்தபாட தகைமையாக GCE O/L, ஆங்கில பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
சிகிச்சை நிலையங்களில் மருந்தகங்களில் பணிபுரிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
உங்களது விபரங்களை
0776256292
எனும் இலக்கத்திற்கு Whatsapp ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலாம் அல்லது மேலதிக தகவல்களுக்கு
0773164251
எனும் இலக்கத்திற்கு அழைத்து நேரு Sir உடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சிலிண்டர் வெடிப்புகள் எதனால்?

காஸ் சிலிண்டர் வெடிப்புகள் தேசியப் பிரச்சினையாக – வீடுகள் தோறும் பீதியையும் விசனத்தையும் ஏற்படுத்தும் விவகாரமாக – மாறியுள்ள நிலையில், இந்தத் திடீர் நெருக்கடிக்கான உள்சூத்திரம் மெல்ல மெல்லக் கசியத் தொடங்கியிருக்கின்றது.

இரண்டு முக்கிய எரிவாயுக்களின் கலவையே நமக்கு சிலிண்டர்கள் மூலம் பாவனைக்கு விநியோகிக்கப்படுகின்றது. பியூட்டேன், புரொப்பேன் ஆகியவையே அவை இரண்டும்.

இலங்கை போன்ற – சுற்றுச் சூழலில் வெப்ப நிலை அதிகமுள்ள – நாடுகளில் இந்தக் கலவை நிறை அடிப்படையில் முப்பது வீதம் புரொப்பேனுக்கு எழுபது வீதம் பியூட்டேன் என்ற விகிதத்தில் அமைந்திருக்க வேண்டும். அப்போதுதான் விபரீதங்கள் ஏற்படாமல் தவிர்க்க முடியும். எனினும் இந்த விகிதம் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் 5 வீத மாறுகைக்கு இடமளிக்கப்படலாம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இப்போது கிடைத்துள்ள முதற்கட்டத் தகவல்களில் தற்சமயம் பாவனைக்கு வழங்கப்பட்ட எரிபொருள் சிலிண்டர்களில் நேரடியாக ஐம்பதுக்கு ஐம்பது வீதம் கலவை கொண்ட பியூட்டோன் – புரோப்பேன் எரிவாயுக் கலவையே நிரப்பப்பட்டுள்ளது. இதுவே வெடிப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

பல இடங்களிலும் காஸ் சிலிண்டர்கள் வெடிக்கவில்லை. எரிவாயு பற்றி எரிகின்ற அடுப்பை ஒட்டித்தான் அவை வெடித்துள்ளன. இதனால்தான் இத்துணை எண்ணிக்கையான வெடிப்புச் சம்பவங்கள் ஏற்பட்டும் மனித உடல், உயிர் பாதிப்புக் குறைவாக உள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

எரிவாயுக் கலவைதான் பிரதான பிரச்சினை என்றால், அது எப்படி நேர்ந்தது, அதன் பின்புலத்தில் பொதிந்துள்ள சூத்திரம் யாது என்பவை எல்லாம் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

இவ்விடயத்தில் மறைந்து கிடக்கக் கூடிய விடயங்கள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

★ எரிபொருள் சிலிண்டர் விநியோகத்தில் ஈடுபடும் இரண்டு நிறுவனங்களும் இந்தக் கலவை மாற்றத்தைச் செய்தனவா, அல்லது அவற்றுக்கு விநியோகிக்கப்பட்ட மூலப் பொருள் அத்தகையதாக இருந்ததா?

★ தர ஆய்வு, மறுபரிசீலனை, சோதனைகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படாதமைக்குக் காரணம் யாது?

★ எரிவாயுவின் கலவை வீதத்தை மாற்றியமை மூலம் நிதிக் கையாடல் ஏதும் முன்னெடுக்கப்பட்டதா?

★ எரிபொருள் விநியோக சந்தையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தையும் புதிய போட்டியாளராக உள்நுழைப்பதற்கான சட்ட ஒழுங்குகளை கடந்த ஒக்ரோபரில் அரசு முன்னெடுத்திருந்தது. அந்தப் போட்டி நிறுவனம் காலூன்றுவதற்கான களச் சூழலை சந்தையில் ஏற்படுத்துவதற்காக இவ்விடயம் ஒரு சதிச் செயலாகக் கட்டவிழ்க்கப்பட்டதா?

★ எரிவாயு விநியோகத்தை ஒட்டிய தரப் பரிசோதனையை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமே முன்னெடுக்கையில், அந்த நிறுவனத்தையும் இதே எரிவாயு விநியோகத்துக்கான போட்டிச் சந்தையில் உள்நுழைத்தமையால், தரப் பரிசோதனைகளில் குழப்பத்தை ஏற்படுத்தி, இப்போது விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இரண்டு நிறுவனங்களின் பெயரையும் கெடுத்து, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வாய்ப்பான சூழலுக்கு வழிதேடப்பட்டதா?

★ இந்திய எரிவாயு விநியோகஸ்தர்களை இலங்கைக்குள் கால்பதிக்க விடும் நடவடிக்கை மூலம் அத்திட்டத்தில் இணைப் பங்காளிகளாக லாபமீட்ட எண்ணுவோர், அதற்காக இத்தகைய சதி வேலைக்குப் பின்னால் இருந்து தூண்டினார்களா?

– இப்படிப் பல்வேறு கேள்விகள் புதிதாகப் பிறந்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் பதில் வழங்கக் கூடிய விதத்தில் முறையான புலன் விசாரணை அவசியமாகும்.

யுகதனவி எரிபொருள் நிலைய பங்குகளை அமெரிக்க நிறுவனம் பெற்று, எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகத்தில் அந்த நிறுவனமும் நேரடியாக சம்பந்தப்படவிருக்கையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கின்றமையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விவகாரமாகும்.

# ஜேர்மன் தூதுவர் கென் சேயூபெர்ட் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு விஜயம்



ஜேர்மன் மொழிக்கான பாடசாலைகளின் இணையம் பி.ஏ.எஸ்.சி.ஏச். இணைந்து வடமாகாணத்தில் ஜேர்மன் மொழி கற்பிக்கப்படும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஜேர்மன் தூதுவர் கென். கொள்கெர் சேயூபெர்ட் விஜயம் மேற்கொண்டார்.

கல்லூரி நிர்வாகம் அவரை வரவேற்று கல்லூரியில் ஜேர்மன் மொழி கற்கும் மாணவர்களுடனான சந்திப்பொன்றையும் நிகழ்த்தினர்.

இந்த வேளையில் மாணவர்கள் ஜேர்மன் மொழியிலான பாடல்களையும் உரைகளையும் நிகழ்த்தியதோடு தமிழ் கலாசார நடனங்களையும் ஆற்றுகைப்படுத்தினர்.

தூதுவர் தமது உரையில் 2023 ஆம் ஆண்டு ஜேர்மன் - இலங்கை இடையிலான நட்புறவின் 70 ஆம் ஆண்டு நிறைவு செயற்பாடுகளுக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஒத்தாசையை நாடிநின்றதோடு கடந்த 10 ஆண்டுகளாக இந்தக் கல்லூரி ஜேர்மன் மொழி, கலாசார, பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கி வரும் ஊக்கத்துக்கு நன்றி கூறி சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பையும் வாழ்த்தி நின்றார்.

# பாடசாலைகளில் சுகாதார நடைமுறைகளை தொற்று ஏற்படாத வகையில் பேணவேண்டும்

## மட்டு. வலயக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு



மிகவும் இக்கட்டான நிலையில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதன் காரணமாக மீண்டும் ஒரு தொற்று ஏற்படாத வகையில் பாடசாலையில் சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறு மட்டக்களப்பு வலய கல்வி பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பு மெதடிஸ்த்த மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மெதடிஸ்த்த மத்திய கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஆர்.பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலய கல்விப்பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதியாகக் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பி.இளங்கோ, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்தியர் வி.பவானந்தன், மொரட்டுப் பல்கலைக்கழக ஆய்வாளர் பொறியியலாளர் கபீலா சுப்ரமணியம், மட்டக்களப்பு வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் சி.சுபாகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

2020ஆம் ஆண்டு உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் பொறியியல் பீடத்துக்கு 14 மாணவர்களும் வர்த்தக பிரிவுக்கு 03 மாணவர்களும், மருத்துவ பீடத்துக்கு ஒரு மாணவரும், தொழில்நுட்ப பீடத்துக்கு 02 மாணவர்களும், ஏனைய துறைகளுக்கு 12 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒரே தடவையில் பாடசாலையில் பொறியியல் துறைக்கு 14 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிகழ்வில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டமையுடன் மாணவர்களின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் பொறியியலாளர் கோபிநாத் பாடசாலை சமூகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த வலயக் கல்விப் பணிப்பாளர் -

தற்போது இக்கட்டான நிலையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பரீட்சைகளை நடத்திமுடிப்பதே பிரதான நோக்கமாகவிருக்கின்றது.

இந்த வருடத்தில் பிற்போடப்பட்டுள்ள பரீட்சைகளை அடுத்த வருடத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் மீண்டும் ஒரு தொற்று ஏற்பட்டு விடக்கூடாது.

அதன் காரணமாக சுகாதார நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படவேண்டும். அடிக்கடி சுகாதாரத் துறையினரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

சுழற்சி முறையான கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. பாடசாலையை முழுமையாக மூடிவிடுவது என்பதற்கு அப்பால் சுழற்சி முறையில் இயங்குமானால் அனைத்து மாணவர்களுக்கும் சீரான கற்பித்தல் செயற்பாடுகளை வழங்க முடியும்.

பாடசாலைகள் தொடர்ச்சியாக மாணவர்கள் தொற்றுக்குள்ளாகாமல் கல்விகற்கக் கூடிய நிலையை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# எரிவாயு அடுப்பு வெடித்து மட்டக்களப்பிலும் சிதறியது

மட்டக்களப்பு - திராய்மடு சுவிஸ் கிராமம் பகுதியில் நேற்று (புதன்கிழமை) காலை, எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறிய சம்பவொன்று பதிவாகியுள்ளது.

திராய்மடு சுவிஸ் கிராமம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று காலை, தேநீர் தயாரிப்பதாற்காக எரிவாயு அடுப்பை செயற்படுத்திய வேளையில் இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டதாகப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அதாவது எரிவாயு அடுப்பைச் செயற்படுத்தி விட்டு, வெளியில் வந்து உறவினர்களிடம் கதைத்துக் கொண்டிருந்த வேளையில் வெடிப்புச் சம்பவமொன்று ஏற்பட்டதை உணர்ந்து அந்த இடத்துக்குச் சென்று பார்த்தபோது, எரிவாயு அடுப்பு வெடித்து சிதறி இருந்ததாகக் குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

அதன்பின்னர், வெடிப்பு சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸாருக்கும் கிராம கிராமசேவகர் அலுவலருக்கும் குடும்பத்தினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘ஒமிக்ரோன்’ தொற்றாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கக்கூடும்

## ஹேமந்த எச்சரிக்கை



புதிய ‘ஒமிக்ரோன்’ வைரஸ்

திரிவு நாட்டில் பரவுவதற்கான வாய்ப்பு குறைந்தளவிலேயே காணப்படுவதாக பிரதி சுகாதார சேவைகள்பணிப்பாளர்நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் புதிய ‘ஒமிக்ரோன்’ தொற்றுக்குள்ளானவர்கள், அதுதொடர்பில் அறிந்திராமல் நாட்டுக்குள் பிரவேசிக்கக் கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்களை, மாதிரி பரிசோதனையினூடாக மாத்திரமே அடையாளம் காண முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# காரைநகர் – ஊர்காவந்துறை பாதையில் பயணிப்போருக்கு பாதுகாப்பு அங்கிகள்

யாழ். காரைநகர் – ஊர்காவற்துறைக்கு இடையில் நடைபெறும் பாதை சேவையில் பயணிப்போருக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பாதுகாப்பு அங்கிகளை வழங்கியுள்ளனர்.

காரைநகர் – ஊர்காவற்துறைக்கு இடையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இலவசமாக பாதை சேவையை நீண்டகாலமாக நடத்தி வருகின்றனர்.

குறித்த பாதை சேவை ஊடாக உத்தியோகஸ்தர்கள், ஊர்காவற்துறை நீதிமன்றம் செல்வோர், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் சென்று வருகின்றனர்.

சுமார் 500 மீற்றர் தூரமான இந்த பாதை சேவை நடைபெறாவிடின், இரண்டு ஊர்களுக்கு இடையில் பயணிப்போர் யாழ்ப்பாணம் சென்றே, செல்லவேண்டும். அதற்காக அவர்கள் சுமார் 40 கிலோ மீற்றர் தூரம் சுற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

இரண்டு ஊர்களுக்கு இடையிலும் நிரந்தரப் பாலம்அமைக்கும்பணிகள்முன்னெடுக்கப்பதற்கு சுமார் 170 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்த போதிலும், பாலம் அமைப்பதற்கான பணிகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி களப்பில் சேவையில் ஈடுபட்டு வந்த பாதை கடந்த 23ஆம் திகதி விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்தவர்களில் பாடசாலை மாணவர்கள் ஐந்து பேர் உள்ளிட்ட ஏழு பேர் உயிரிழந்திருந்தனர்.

பாதையில் பயணித்தவர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படாது, பாதுகாப்பு இன்றியே அவர்கள் பயணித்தமையாலேயே விபத்தில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன என குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. சீலாமுனை பகுதி வீடொன்றில் எரிகாயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு – சீலாமுனை பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சீலாமுனை – ஆனந்தன் வீதிக்கு அருகிலிருந்த வீட்டில், தனிமையிலிருந்த தி.சத்தியராஜன் என்னும் 69 வயதுடையவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு, தீயிட்டு குறித்த நபர் எரிந்துள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

குறித்த நபருக்கு அருகில் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவர் தற்கொலை செய்துகொண்டாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் கூறுகின்றனர்.

குறித்த சம்பவ இடத்துக்கு வருகைதந்த மாவட்ட குற்றத் தடயவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.மேலும் களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டமையுடன், விசாரணைகளை முன்னெடுத்து, பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

# பண்டிகைக் காலங்களில் நாடு முடக்கப்படமாட்டாது

## ரமேஷ் பத்திரண அறிவிப்பு



பண்டிகைக் காலத்தில் நாட்டில் முடக்கம் அமுல்படுத்தப்பட மாட்டாது என இணை அமைச்சரவை செய்தித் தொடர்பாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தடுப்பூசி செலுத்தியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். எனவே எதிர்வரும் பண்டிகைக்காலத்தில் அனைத்து குடிமக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# வெளிநாட்டவர்களிடமிருந்து மலேரியாவும் பரவும் வாய்ப்பு!

இலங்கையில் உள்ளவர்கள் வெளிநாட்டவர்களிடமிருந்து மலேரியா நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என சுகாதார அமைச்சின் மலேரியா எதிர்ப்பு பிரசார அமைப்பு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வருபவர்கள் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என மலேரியா எதிர்ப்பு பிரசார அமைப்பின் பணிப்பாளரின் ஆலோசகர் சமூக வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இதுவரையில், நாட்டுக்கு வந்த வெளிநாட்டவர்களில் 21 மலேரியா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ள அதேவேளை, கடந்த வருடம் 30 மலேரியா நோயாளிகள் பதிவாகியிருந்தனர் என அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டிலிருந்து வருகை தரும் மக்கள், கொரோனாத் தொற்றுநோய் காரணமாக 14 நாள்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், 10 ஆவது நாளில் மலேரியா பரிசோதனை செய்யப்பட்டனர் என்றும் அங்கு 10 மலேரியா வழக்குகள் பதிவாகியிருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

# புங்குடுதீவு 25 வீட்டுத்திட்ட கிராமம் வெள்ளத்தில் மூழ்கியதால் மக்கள் பாதிப்பு





யாழ்ப்பாணம் – புங்குடுதீவு, 25 வீட்டுத்திட்ட கிராமம் வெள்ளத்தில் மூழ்கியதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு முதலாம் வட்டாரம், ஜே – 28 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 25 வீட்டுத்திட்ட கிராமத்தில் வசிக்கும் 25 குடும்பங்கள் தொடரும் மழை காரணமாகப் பாதிப்படைந்துள்ளனர். அத்தோடு வீடுகளுக்கு செல்லும் வீதியும் வெள்ளத்தில் மூழ்கியதால் மக்களுடைய போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 209

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**538. ஐ.நாவில் போதிய சாட்சியங்கள் இல்லையா? பின் ஏன் பிரதிநிதிகள் வரவேண்டும்?**

ஸ்ரீலங்காவின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஐ.நாவின் முன் பதியப்பட்ட சான்றுகள், 1958இல் இருந்தே இருக்கின்றன. 1977இல் இருந்து அவை மிகவும் அதிகளவில் பதியப்பட்டு, 2002 இல் இருந்து ஐ.நாவினாலேயே சேர்க்கப்பட்டவை என சாட்சியங்களும் ஆவணங்களும் உண்டு. அவற்றை ஆதாரப்படுத்தும் மேலதிக ஆதாரங்களும் சமர்ப்பணங்களும் கொடுக்கப்படலாம். ஆனாலும் மனித உரிமைக் கூட்டத் தொடர் நடக்கும் காலங்களில் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் வருகை தருவது வழக்கம். அவர்கள் கருத்தாராய்வுக்காக சில கூட்டங்கள் நடத்துவதும் பொதுவானது. அதேபோல் பல குழுக்கள் ஆராய்வுக் கூட்டங்கள் நடத்தும். இவற்றில் பங்குபற்றி தமிழர் நிலைப்பாட்டை எடுத்துரைக்கவோ அல்லது பரப்பப்படும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் உண்மைத் தன்மையற்ற கருத்துக்களை எதிர்த்து சாடவோ ஆளுமையுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள், மனித உரிமைகளில் அனுபவப்பட்டவர்கள், அர்ப்பணிப்புள்ளவர்கள் தேவையாகிறார்கள். இவர்களை நாங்கள் கட்டமைப்புகளின் மூலம் இணைத்துக் கொள்ளவேண்டும். இப்பொழுது ஏட்டிக்குப் போட்டியாக இவர் பக்கத்திலிருந்து போவதும், அவர் பக்கத்திலிருந்து போவதுமாக தங்களது கொள்கை பரப்புக்குள் விடயங்கள் நடத்தப்படுகின்றனவேயொழிய மனித உரிமை மன்றுக்கு ஏதுவானவை நடப்பதில்லை. அவை தமிழ் மக்களின் துர்ப்பாக்கியமான அரசியல். இவற்றால்தான் சர்வதேச குற்றவியல் மன்றத்தில் பதியப்பட்ட சமர்ப்பணங்களை ஒட்டி மனித உரிமைமன்றில் பணிபுரிவோருக்குப் பலத்த ஆதங்கங்கள் உண்டு.



**539. தமிழ் மக்களுக்கு நடந்தவை இனப்படுகொலை என ஐ.நா. கட்டமைப்புக்களால் ஏற்றுக்கொள்ளப்படாது என அபிப்பிராயப்படுகிறீர்களா?**

தற்சமய சர்வதேச புவியியல் அரசுகளின் சூழ்நிலைகளில் ஐ.நாவில் அப்படியான நிலைப்பாடு வருவதற்கு சாத்தியங்கள் இல்லை. அரசியல் சூழ்நிலைகள் மாறினால் அந்த உந்துதலில் நிலைப்பாடுகள் மாறலாம்.

இப்பொழுது ஐ.நாவில் காரியதரிசியால் சர்வதேச மனித உரிமை மன்றுக்கு விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டுள்ளவை 2002 - 2009 காலப்பகுதியில் நடந்த சம்பவங்களே.

2009இன் பின் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை, காணிகள் அபகரிப்பிலும், தொல்பொருள் ஆய்வு எனவும், மறைந்தோரை நினைவு கொள்ளப்படாது என வரும் தடைகளாலும் இன்னுமொரு வரையறைக்குட்பட்ட குற்றமாக 'ஆக்கிரமிப்பாக' நடத்தப்படுகிறது. அவை ஐ.நாவிற்கு தமிழ் மக்களாலும் சர்வதேச மனித உரிமைஅமைப்புக்களாலும் பாரப்படுத்தப்பட்டுள்ளன. ஐ.நாவின் கட்டமைப்புக்களே தங்களது சாட்சியம் தேடும் பணிகளில் இவற்றை கணக்கெடுப்பார்கள். 2002 - 2009 காலப்பகுதியில் நடந்த சம்பவங்களுக்கு இருந்த இனப்படுகொலையின் நோக்கம் பற்றி தெளிவு கொள்ள இவை பார்க்கப்படுமேயொழிய, ஐ.நாவின் காரியதரிசியாலோ அல்லது ஐ.நாவின் பாதுகாப்பு சபையால் 2009 இன் பின் மேற்கொள்ளப்பட்ட காலம் மனித உரிமை மன்றுக்கு தனியான அல்லது மேலதிகமான ஆய்வுக்காக பாரப்படுத்தப்படவில்லை. அவற்றை உற்றுநோக்கும் போது இனப்படுகொலை என்பதை தற்சமயத்துக்குத் தவிர்த்து, போர் வலய, மனிதாபிமானத்துக்கு எதிரான, மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் நடந்தன என்ற தீர்மானங்களுக்கு வருவதற்கு சாத்தியக்கூறுகள்நிறையவே உள்ளன. அப்படியான தீர்மானங்கள் நடந்தாலே அவைகள் தமிழ் மக்களின் பரிகார நீதிக்கு அனுகூலமாயிருக்கும்.



மக்கள் குடியிருப்புகள் மீது நடந்த தாக்குதல்கள்

**540. இனப்படுகொலையா என உரோம் சட்டங்களின் அடிப்படையில்தானே ஐ.நா. கட்டமைப்பு பார்க்க வேண்டும். அதில் ஏன் அரசியல்?**

சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் தான் பார்க்க வேண்டும். ஒரு நாட்டின் சட்டங்களை அந்த நாட்டின் அரசியல்வாதிகள்தான் ஏற்படுத்துகிறார்கள். அவர்கள் அவை தமக்கு ஏதுவாக, நல்லெண்ணம் என்று சொல்லப்போனால் தமது நாட்டிற்கு ஏதுவாக, ஏற்படுத்துகிறார்கள்.



அதுபோல சர்வதேசச் சட்டங்களும் சர்வதேச நாடுகளின் அரசியல்வாதிகளால் தான் இயற்றப்படுகின்றன. அங்கு பலம் வாய்ந்த நாடுகளால் தங்களது அனுகூலத்திற்கு ஏற்பதான் அவை ஏற்படுத்தப்படுகின்றன. சுதந்திரமாக, சட்ட அடிப்படை பார்க்க வேண்டும் என்ற பணிப்பு இருந்தாலும் அந்த பணிப்பு அரசியல் செல்வாக்குகளால் பாதிப்படைகிறது.

இப்படியான அரசியல்தான் நீதியான தீர்மானங்களுக்கு இடையே வருகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் இனப்படுகொலையில் பங்குதாரிகள் என தமிழ் மக்களால் குற்றம் சுமத்தப்பட்டதால் அவர்களும் அவர்களது நேச நாடுகளும் ஓர் அணியிலும் சீனா, ரஷ்யாவும் அவர்களது நேச நாடுகளும் இன்னுமொரு அணியில் இருந்த அப்படியான தீர்மானங்களை முடக்குவார்கள். இவர்களுக்கு இடையேதான் தமிழ் மக்களின் கதி அகப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவோ முற்றுமுழுதாக இந்தக் காலப்பகுதியில்( 2002 - 2009 ) அரசு நாட்டின் எல்லா மக்களையும் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கவும், நாட்டில் இறைமையை நிலைநிறுத்தவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடியதாகவும், அதில் மரணங்கள், பாதிப்புக்கள், அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்ற வாதத்தைத்தான் முன்னெடுக்கிறது.

அந்த யுத்தத்திற்கு ஆதரவு தந்த எல்லா சர்வதேச நாடுகளும் அதற்கு இணைவாக பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமாக அதனைக் காட்டி நிற்கும். ஆனாலும் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்பட எல்லா நாடுகளுமே அதனை வசதியாகப் பாவித்து ஸ்ரீலங்கா அளவுக்கு மீறிய வன்முறைகளைச் செய்தது எனவும், சர்வதேச மனிதாபிமானச்சட்டங்களைக் கணக்கெடுக்கவில்லை எனக் கருதுகின்றன. இந்த உணர்வுகளும், ஸ்ரீலங்கா அரசு நீதியான அரசியல் தீர்வுக்கு வர விருப்புள்ளதாக இல்லாது இருப்பதும், தொடர்ந்தும் அதே பாதையில் அது பயணிப்பதும் தமிழ் மக்களுக்கு அனுகூலமாக உள்ளதால் அதனை ஒட்டி தீர்மானங்களை ஆக்கிக் கொள்ள முன்னெடுப்புக்கள் செய்வதுதான் தற்சமய புவியியல் அரசியல் சூழலில் யதார்த்தம்.

(வளரும்......)



# எரிவாயு விலையையும் அதிகரித்துவிட்டு குண்டையும் வீசியுள்ளது அரசு!

## கயந்த கருணாதிலக குற்றச்சாட்டு



போர்க்காலத்தில் குண்டுகள் வெடிக்கும் என்று வெளியில் செல்வதற்கு அச்சமடைந்ததைப் போன்று, இப்போது வீட்டுக்குள் எப்போது எரிவாயு சிலிண்டர் வெடிக்குமோ என்று அச்சத்துடன் மக்கள் வாழ வேண்டியேற்பட்டுள்ளது. - என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடு மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு இந்த அரசால் தள்ளப்பட்டுள்ளது. போர் நிலவிய காலத்தில்கூட இந்தளவுக்கு வாழ முடியாத நிலைமைக்கு மக்கள் முகங்கொடுக்கவில்லை.

போர்க்காலத்தில் வீதிகளிலும், பஸ்கள் மற்றும் ரயில்களிலும் பயணிப்பதற்கு மக்களுக்கு எங்கே குண்டு வெடிக்குமோ என்று அச்சம் இருந்தது.

அதேபோன்று இப்போது வீடுகளில் இருப்பதற்கும் அச்சமாக இருக்கின்றது. எப்போது எரிவாயு வெடிக்குமோ என்ற அச்சம் காணப்படுகின்றது.

சமையல் எரிவாயு விலையைப் பாரியளவில் அதிகரித்து எரிவாயு குண்டையும் மக்கள் பக்கத்தில் அரச தரப்பினர் வீசியுள்ளனர். இதேவேளை, சகல பொருள்களின் விலைகள் தொடர்பாகக் கறுப்புச் சந்தை வியாபாரிகளுக்குத் தீர்மானம் எடுக்க அனுமதியளித்து விட்டு தினசரி விலைகளைப் பாரியளவில் அதிகரிக்கின்றனர்.

இந்த அரசு வந்த நாள் முதல் மக்களின் சமையல் அறைகளின் மீதே தாக்குதல் நடத்தியது. சம்பளத்தையும் வருமான வழிகளையும் தவிர மற்றைய அனைத்தினதும் விலைகளை அதிகரித்துள்ளனர். 2019ஆம் ஆண்டில் 1,493 ரூபாவுக்குப் பெற்ற சமையல் எரிவாயு இப்போது 2 ஆயிரத்து 675 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிவாயு எந்த நேரத்தில் வெடிக்குமோ என்ற பயத்தில் இருக்க வேண்டியுள்ளது. போர்க்காலத்தில் வீடு திரும்பும் வரையில் வீதிகளில் ஏதாவது வெடிக்குமோ என்ற நிலைமை இருந்தது. இப்போது வீட்டுக்குள் வெடித்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஒன்று எரிவாயு சிலிண்டரை வெளியில் வைக்க வேண்டும் இல்லாவிட்டால் வீட்டார் வெளியில் இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினையின் பாரதூரத் தன்மையைச் சிறிதாக எடுக்க வேண்டாம் என்று கேட்கின்றோம். எரிவாயு சிலிண்டர்களின் பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றோம். - எனத் தெரிவித்துள்ளார்.

## 200 அடி உயரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞன் வவுனியாவில் கைது







வவுனியாவில் 200 அடி உயர தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி தனது மனைவியை மீட்டுத் தரக்கோரி போராட்டம் மேற்கொண்ட இளைஞர் (கணவன்) கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞன் மல்லாவி பகுதியைச் சேர்ந்த 18 வயது யுவதியைக் காதலித்து வீட்டுக்கு அழைத்து வந்திருந்தமையுடன், கடந்த ஜூலை மாதம் இருவரும் பதிவுத் திருமணமும் செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த இளைஞனின் வீட்டுக்கு வானில் சென்ற பெண் வீட்டார் குறித்த இளைஞனின் உறவினர்களைத் தாங்கி விட்டு மனைவியைக் கொண்டு சென்றனர் என வவுனியா பொலிஸில் கணவன் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

தனது மனைவி கடத்தப்பட்ட நிலையில் வாகன இலக்கம், வந்தவர்கள் விவரம் என்பவற்றை வழங்கியும் தனது மனைவியை பொலிஸார் மீட்டுத் தரவில்லை எனவும் பொலிஸார் பக்கச்சார்பாகவும் அசமந்தமாகவும் செயற்படுகின்றனர் எனத் தெரிவித்தும் குறித்த இளைஞன் வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் முன்பாக கற்குழி பகுதியில் அமைந்துள்ள 200 அடி உயரமான தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டார்.

மூன்று மணிநேர போராட்டத்தையடுத்து பொலிஸாரும் உறவினர்களும் இணைந்து ஒலிபெருக்கி மூலம் வாக்குறுதி வழங்கி தொலைத்தொடர்பு கோபுரத்திலிருந்து இளைஞனைக் கீழே இறக்கினர்.

இந்நிலையில் தொலைத்தொடர்பு கோபுர அதி உயர் வலையத்தினுள் சென்றமை, தொலைத் தொடர்பு கோபுரத்தில் ஏறி அதனைச் சேதப்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அந்த இளைஞன் சம்பவம் இடம்பெற்று ஒரு மாதத்தின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த இளைஞனை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவிலிருந்து புதிய பஸ் சேவை

*இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை பஸ் நேற்று (புதன்கிழமை) முதல் புதிய சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.*

*அந்தவகையில் வவுனியா புதிய பஸ் நிலையத்திலிருந்து காலை 10.30 மணிக்குப் புறப்படும் பஸ் மன்னார் நோக்கிப் புறப்பட்டு பிற்பகல் 13.30 மணிக்கு மன்னாரிலிருந்து திருகோணமலை நோக்கிப் புறப்படும்.*

*மீண்டும் மறுநாள் காலை 05.45 மணிக்குத் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டு மீண்டும் பிற்பகல் 13.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சேவையை வழங்கவுள்ளது.*

## நாடாளுமன்ற உறுப்பினராக லலித் வர்ணகுமார பதவியேற்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க பதவியை இராஜினா செய்தமையை தொடர்ந்து அந்த வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்ட லலித் வர்ண குமார, பிரதி சபாநாயகர் முன்னிலையில் நேற்று (புதன்கிழமை) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கடந்த 2020 பொதுத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிட்டு 46 ஆயிரத்து 361 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காணி அளவீட்டுக்கு இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் ஜீவன் எச்சரிக்கை



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கில் முன்னெடுக்கப்படும் சட்டரீதியான காணி அளவீடுகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தின், அபிவிருத்தி, பொருளாதார, சமூக மேம்பாடு உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட திட்டங்களுக்கு அமைவாக அரச அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். எனினும், அண்மைய நாள்களில் மாதகல் போன்ற இடங்களில் அரச அதிகாரிகளின் செயற்பாட்டிற்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் தலையீடுகளைச் செய்துள்ளனர்.

காணி அளவீடுகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு கரிசனைகள் காணப்படுமாயின் அதுபற்றி கலந்துரையாடல்களைச் செய்வதற்கு நான் எப்போதுமே தயாராகவே உள்ளேன்.

அவ்வாறிருக்கையில், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு பங்கம் ஏற்படுத்துவதானது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

இவ்விதமான நிலைமைகள் தொடருமாக இருந்தால் வடக்கு மாகாணத்தின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயங்கப்போவதில்லை - என்றார்.

# ‘ஒமிக்ரோன்’ திரிவு வைரஸ் பரிசோதனைகளை மன்னார் மாவட்டத்திலும் முன்னெடுக்க முடிவு

## பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவிப்பு



ஒமிக்ரோன்’ திரிவு வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் வடமாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பி.சீ.ஆர்.மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் மேலும் புதிதாக 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, 2 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

நவம்பர் மாதம் 25 டெங்கு தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, நவம்பர் மாதம் 540 கொரோனாத் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் 2 ஆயிரத்து 916 தொற்றாளர்களும், மாவட்டத்தில் தற்போது வரை 2 ஆயிரத்து 933 கொரோனாத் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 5 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 2 தொற்றாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது வரை 28 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த மாதம் உயிரிழந்த ஐவரில் இருவர் எவ்விதத் தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை.

மற்றைய இருவர் இரண்டாவது தடுப்பூசியை பெற்று 3 மாதங்கள் கழிந்துள்ளன. மேலும் 60 வயதிற்கு மேற்பட்டோர் 2 தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கழிந்திருந்தால் அவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரம் நிறைவடையும்.

எனவே 60 வயதுக்கு மேற்பட்டோர் 2 தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கழிந்திருந்தால் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்குச் சென்று பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மன்னார் மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் தற்போது வரை மொத்தமாக 54 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 25 டெங்கு தொற்றாளர்கள் கடந்த நவம்பர் மாதம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் பனங்கட்டு கொட்டு, எமில் நகர், சின்னக்கடை, மூர்வீதி, பேசாலை 8 ஆம் வட்டாரம் போன்ற பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, குறித்த பகுதிகளில் டெங்கு தொற்று அபாயம் உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனவே மக்கள் நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் காண்டு அழிப்பதோடு, நுளம்பின் தாக்கத்தில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் வழிமுறைகள் உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

காய்ச்சல் ஏற்படும் போது சுய சிகிச்சைகளை செய்து கொள்ளாமல் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அல்லது வைத்தியர்களிடம் சென்று தமது பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

டெங்கு குருதி பெருக்கு நோய் அறிகுறி உடைய இருவரும் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சலை தணிப்பதற்காக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பொது மக்கள் எம்.எஸ்.ஏ.ஐ.டி. என்ற வகையைச் சேர்ந்த மாத்திரைகளை எக்காரணம் கொண்டும் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சுய சிகிச்சையை தவிர்த்து உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அல்லது வைத்தியர்களிடம் சென்று தமது பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது சர்வதேச அளவில் கரிசனையை செலுத்தி உள்ள ‘ஒமிக்ரோன்’ என்கிற வகை திரிவுடைய வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக வடமாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பி.சீ.ஆர்.மாதிரிகள் எதிர்வரும் மாதத்தில் சேகரிக்கப்பட்டு ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளன. டிசெம்பர் மாதம் பண்டிகை காலம் என்பதால் பொது மக்கள் அதிக அளவில் ஒன்று கூடும் சந்தர்ப்பம் உள்ளது.

எனவே பொதுமக்கள் ஒன்று கூடும் நிலமைகளைத் தவிர்த்து சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டுக்களப்பு உள்ளூராட்சி சபைகளின் தற்காலிக ஊழியர்கள் கவனவீர்ப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிசபைகளில் கடமையற்றும் தற்காலிக ஊழியர்கள் தங்களை நிரந்தரமாக்குமாறு வலியுறுத்தி நேற்று (புதன் கிழமை) காலை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேசசபைகள், நகரசபைகளில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டும்என்னும்தலைப்பில்அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு முன்பாக நேற்று (புதன் கிழமை) காலை தற்காலிக அமைய ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

‘எங்களுக்கும் நியாயமான தீர்வு வேண்டும், இந்த அரசாங்கத்தையே நம்புகின்றோம், எமக்கும் நிரந்தர நியமனம் வேண்டும், எமது சேவைக்கும் மதிப்பளியுங்கள்’போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போதுள்ள அரசாங்கத்தின் காலத்திலேயே தங்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டமையுடன்அக்காலத்திலேயே ஊழியர்கள் நிரந்தரமாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன எனவும் கடந்த நல்லாட்சிக்காலத்தில் தாங்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லையெனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று மட்டக்களப்பு போரதீவுப் பற்று பிரதேசசபைக்கு முன்பாகவும் நேற்றுக் காலை கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரதேசசபையின் தவிசாளர் யோ.ரஜனியிடம் வழங்கி வைக்கப்பட்டது.

அந்த மகஜரில், நாங்கள் போரதீவுப் பற்று பிரதேச சபையில் ஆறு வருடங்களுக்கு மேலாக தற்காலிகமாக மற்றும் பதிலீட்டு ஊழியர்களாகக் கடமையாற்றி வருகின்றோம் என்பது தாங்கள் அறிந்ததே இந்தச் சபையுடைய வருமானம், சேவை மற்றும் ஏனைய ஒவ்வொரு செயற்பாடுகளிலும் எமது சேவைகள் அளப்பெரியவை. நாங்கள் எந்த நிலைமைகளிலும் காலம் நேரம் பாராது முழுமனதுடன் சேவையாற்றுவதுடன் சூழல் சுத்திகரிப்பு மற்றும் அனர்த்த நிலைமை காலங்களிலும் தற்போதைய கொரோனா தொற்றுநோய் நிலைகளிலும் எமது சுகாதாரத்தையும் உயிரையும் துச்சமாக மதித்து பொதுநல செயற்பாடுகளில் இப்பிரதேச சபையுடன் ஒன்றிணைந்து பாடுபட்டு உழைத்து வருகின்றோம் அத்துடன் மாதாந்த குறைந்த ஊதியத்தைப் பெற்று வருகின்றபோதிலும் இப்பிரதேச சபையின் சேவை, முன்னேற்றம் அபிவிருத்தி போன்றவற்றிற்கு அயராது உழைக்க தவறியதேயில்லை.

எமது ஒவ்வொரு ஊழியர்களினதும் குடும்பம் எங்களது குறைந்த மாதாந்த வருமானத்தைக் கொண்டு தற்பொழுது ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்புக்கு முகம்கொடுத்து வாழ வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம்.

மேலும் நாங்கள் 6 வருடங்களுக்கு மேல் இவ்வாறு பாரிய சேவையை இந்தச் சபைக்கு வழங்கியபோதிலும் இன்று வரை எங்களுக்கான எந்தவித நிரந்தர நியமனமும் வழங்கப்படாமையால் எங்களை புறக்கணிக்கின்றனர் என உணர்வதுடன் உளரீதியான பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளோம். அத்துடன் எங்களில் மாறுபட்ட வயது உடையவர்களுக்கு இன்னும் கால நீடிப்பால் நிரந்தர நியமனம் பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல் நிலை ஏற்படும் என்பதையும் தங்களின் மேலான கவனத்துக்கு அறியத்தருகின்றோம்.

ஆகவே, எமது நிலைமையையும் தங்களது கவனத்தில் கொண்டு வயது மற்றும் எதிர்காலநன்மை கருதி எங்களுக்கு நிரந்தர நியமனத்தை மிக விரைவாக பெற்றுத் தருமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். – என மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தரம் குறைந்த எரிபொருள் இறக்குமதி தனியார் பஸ் உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

நாட்டில் தரம் குறைந்த எரிபொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன குற்றம்சாட்டியுள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பெற்றோல் மற்றும் டீசல் என்பன தரம் குறைந்தவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேர்காணலொன்றில் வைத்து அவர் இந்த விடயங்களைக் கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

தரம் குறைந்த எரிபொருள்களைப் பயன்படுத்துவதால் எங்களது வாகனங்கள் பழுதடைகின்றன.

தரம் குறைந்த பெற்றோல், டீசல் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுவதாக நாம் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

கடந்த காலங்களில் பெற்றோல் மற்றும் டீசல் பயன்படுத்தி வாகனங்கள் செலுத்திய போது பயணம் செய்யக் கூடிய தூரமும், தற்பொழுது பயன்படுத்தப்படும் எரிபொருள்களின் மூலம் பயணம் செய்யக்கூடிய தூரத்திலும் வித்தியாசம் உண்டு.

தற்பொழுது வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் சீக்கிரத்தில் தீர்ந்து விடுகின்றது. குறைந்த தூரமே பயணம் செய்ய முடிகின்றது.

இலங்கையில் எரிபொருளின் தரம் குறித்து பரிசோதனை நடத்துவதற்கு சுயாதீன நிறுவனமொன்று கிடையாது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே சமையல் எரிவாயு தரம் குறைந்தது என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் எரிபொருள்களும் தரம் குறைந்தவை என பரபரப்பு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தறையில் தீ விபத்து சிறுமி ஒருவர் உயிரிழப்பு

மாத்தறை – வெலிகம பிரதேசத்தில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 வயதான சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த தீ விபத்தின்போது வீட்டுக்குள் இருந்த சிறுமியின் பாட்டி மற்றும் சகோதரி ஆகியோர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தமிழ் முற்போக்குக் கூட்டணி அங்கீகாரம்

## 'மின்சூள்' சின்னம்; நமது மக்களின் வெற்றி என்கிறார் மனோ



தேர்தல் ஆணைக்குழுவால், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

'டோர்ச் லைட்' என்ற மின்சூள் சின்னம் கூட்டணியின் அதிகாரபூர்வ சின்னமாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான கடிதத்தை தேர்தல் ஆணைக் குழு ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயலாளர் சந்திரா சாப்டருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இது பற்றி கூட்டணி தலைவர் மனோ எம்.பி. ஊடகங்களுக்குக் கூறியதாவது:-

2015ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில், ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சித் தலைவர்களால் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி நேற்று ஆறு ஆண்டுகளை கடந்த நிலையில், இடையில் இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள், ஒரு ஜனாதிபதித் தேர்தல், ஓர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு இந்த நாட்டின் தேசிய அரங்கில் தவிர்க்க முடியாத ஓர் அரசியல் இயக்கமாக வளர்ந்து, நேற்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவால் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் கட்சிகள், தேசிய அரங்கில் ஒன்றுசேர வேண்டும் என்ற பேரவா இன்று தமிழ் முஸ்லிம் மக்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றி இருப்பதை நானறிவேன்.

எமது மக்களின் இந்த மன உணர்வுக்கு உயிர் கொடுத்து முழு நாட்டுக்கும் முன்மாதிரியாக நாம் இன்று நிற்கின்றோம்.

ஒற்றுமை நிலைக்க வேண்டும் என எதிர்பார்த்த பெருந்திரள் மக்கள் மத்தியில், இது தேர்தல் வரையிலான உறவு. ஆகவே, தேர்தல் முடிந்த பின் உடைந்து விடும், உடைய வேண்டும் என்று எதிர்பார்த்த விநோதமானவர்களும் நம் மத்தியில் இருந்தார்கள்; இருக்கின்றார்கள்.

அவர்களை நாம் இன்று ஏமாற்றி இருக்கின்றோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, கட்சிகள் ஒன்றுசேர வேண்டும், ஒன்றுசேர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படும், அதேவேளை இன்று ஒன்றுபட்டு நின்று, பல சவால்களுக்கு மத்தியில் ஆறு ஆண்டுகளை கடந்து, எம்மைவிட்டுப் பிரிந்தவர்களுக்கு துயருடன் விடை கொடுத்து விட்டு, புதியவர்களை உள்வாங்கி, எமது தேசிய பயணத்தை மாத்திரம் நிறுத்தி விடாமல் பயணித்து, இன்று அதிகாரபூர்வ பதிவையும், தமிழ் முற்போக்குக் கூட்டணி பெற்றுள்ளது.

இந்தவெற்றிக்குப்பின்னால்எங்கள்ஒவ்வொருவரினதும்கடும்உழைப்பு, நேர்மை, துணிச்சல், தூரப்பார்வை, நிதானம், இன உணர்வு ஆகியவை இருக்கின்றன.

எங்கள் மின்சூள் சின்னம், நாடு முழுக்க இருளை அகற்றி, ஒளி பாய்ச்சும் இயக்கமாக இன்னமும் முன்னேற்றம் பெற, அனைத்து உடன்பிறப்புகளினதும், இரத்தத்தின் இரத்தங்களினதும் வாழ்த்துகளையும், ஆதரவுகளையும் எதிர்பார்க்கின்றோம் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

# காணி உரிமையாளர்களுடனான ஆளுநரின் சந்திப்பு திடீர் இரத்து!

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் மாதகல் காணி உரிமையாளர்கள் சந்திப்பதற்கு நேற்று ஏற்பாடுகள் இடம்பெற்று இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்ட போதும் திடீரென அந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தால் காணி உரிமையாளர் களுக்கு நேற்று மதியம் 2 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் காணி உரிமையாளர்களைச் சந்திக்கவிருக்கிறார் என கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில் திடீரென அந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது எனவும், இன்று காலை 8 மணிக்கு அந்தச் சந்திப்பு நடைபெறும் எனவும் ஒரு சில காணி உரிமையாளர்களுக்குப் பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பாக வடக்குமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேரடியாகச் சென்று காணி உரிமையாளர்கள் கேட்டபோது, இந்தச் சந்திப்பு தொடர்பில் நமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்றும், இந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது தொடர்பாகவோ நாளை (இன்று) இந்தச் சந்திப்பு இடம்பெறுவது தொடர்பாகவோ எமக்கு எதுவும் தெரியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளுநரைச் சந்திக்க தூர இடங்களில் இருந்து வந்த பொதுமக்கள் அலைக்கழிக்கப்பட்டமையுடன் அங்கிருந்த மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, மாதகலில் கடற்படையினருக்காகக் காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போராட்டத்தை அடுத்தா சந்திப்பை ஆளுநர் ரத்து செய்தார் என் பதை அறிந்துகொள்ள முடியவில்லை.

# புத்தளத்தில் உணவகத்திலும் காஸ் அடுப்பு நேற்று வெடிப்பு

புத்தளம், பாலாவி கரம்பை ஹுதா பள்ளி வீதியில் அல்ஹுதா பலர் பாடசாலைக்கு முன்பாக உள்ள உணவகத்தில் சமையல் அறையில் பயன்படுத்தப்பட்ட விருந்த சமையல் எரிவாயுவில் ஏற்பட்ட கசிவால் அடுப்பு முழுமையாக நேற்று வெடித்துச் சிதறியுள்ளது.

எனினும், இந்த வெடிப்புச் சம்பவத்தில் எவ்விதச் சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் நேற்றும் வெடித்து சிதறியது எரிவாயு அடுப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். வட்டுக்கோட்டையில் வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளது.

வட்டுக்கோட்டை, காளி கோயிலடியில் நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட எரிவாயு அடுப்பே வெடித்துச் சிதறியுள்ளது.

எனினும், வேறு சேதம் எதுவும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சுன்னாகம் கந்தரோடையில் உள்ள வீடு ஒன்றில் இதே போன்ற சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலையிலும் காஸ் அடுப்பு வெடிப்பு

தலவாக்கலை, ஸ்கீம் பகுதியில் மேல் கொத்மலை புதிய வீட்டுத் தொகுதியிலும் நேற்று முற்பகல் 10 மணியளவில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது.

தேநீர்தயாரிப்பதற்காக காஸ் அடுப்பைப் பற்ற வைத்த பின்பு அதனை, அனர்த்தி விட்டு குறித்த நபர் வெளியில் சென்ற ஒரு நொடியிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது என மேற்படி நபர் தெரிவித்துள்ளார்.

வெடிப்பை அடுத்து காஸ் அடுப்பு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அதன் பின்னர் காஸ் சிலிண்டர் உள்ளிட்ட உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்தேன் என வீட்டின் உரிமையாளர் வேலுசாமி ஸ்ரீநாத் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தாக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நியாயம் கிடைப்பதற்கான வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை உரிய அதிகாரிகள் மற்றும் அரசிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த நவம்பர் 27ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வசந்திரன் இலங்கை இராணுவத்தினரால் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட சம்பவம் கண்டனத்துக்குரியதும் மிகவும் கீழ்த்தரமானதுமாகும்.

குறித்த தினத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் தனது பணியைச் செய்துகொண்டிருந்த வேளை இராணுவத்தினர் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கேட்டுக்கொண்டதையடுத்து தனது அடையாள அட்டையைக் காண்பிக்க முற்பட்ட வேளையே தாக்கப்பட்டார் என்று அறிகின்றோம்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு பின்பு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதும் வெறுமனே ஒரு கண்துடைப்பு சம்பவமாகவே நாம் காண்கிறோம்.

இந்த விடயம் தொடர்பாக எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இது தொடர்பாக சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நியாயம் கிடைப்பதற்கான வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை உரிய அதிகாரிகள் மற்றும் அரசிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் ஊடகத்துறைக்குப் பெரும் சவாலாக அமைகின்றது. அண்மைக்காலங்களில் பல்வேறு தரப்பினருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் போலவே குறித்த இந்தச் சம்பவமும் தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதாகவும் அவர்களது ஊடக சுதந்திரத்தைப் பறிப்பதாகவும் அமைகின்றது.

தொடர்ச்சியாக நடைபெறும் இவ்வாறான விடயங்கள் குறித்து நாம் தொடர்ந்தும் அவதானமாக இருந்து பாதிக்கப்படுவோருக்காக எப்போதும் நாம் குரல் கொடுப்போம் - என்றுள்ளது.

## 50 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிதியத்தால் ஏ.கே.ஓ புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.



உள்நாட்டிலுள்ள தன்னார்வத் தொண்டு நிதியமான எம். எம் பவுண்டேசன் 2018 ஆம் ஆண்டு முதல் ஏ.கே.ஓ புலமைப் பரிசில் திட்டத்தில் பங்குதாரராகச் செயற்பட்டு நாட்டிலுள்ள வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், கலை, கலாசாரப் பணிகளுக்கும், காலநிலை மாற்றத்துக்கெதிரான செயற்பாடுகளுக்காகவும் உதவிகளைப் புரிந்து வருகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்படும் வருமானம் குறைந்த மாணவர்கள் 50 பேருக்கு முதற்கட்டமாக மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதன்படி, பல்கலைக்கழகத்துக்கும், எம். எம் பவுண்டேசன் நிதியத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரும், எம். எம் பவுண்டேசன் நிதியத்தின் சார்பில் அதன் முகாமைத்துவ அறங்காவலர் டி. நிமல் மரின்டஸ் மற்றும் அறங்காவலர் நிலங்கா மரின்டஸ் ஆகியோரும் ஒப்பமிட்டனர்.

இந்த நிகழ்வின்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் எஸ்.ஐங்கரன், நிதியாளர் கே.சுரேஸ்குமார் ஆகியோரும் உடனிருந்தனர்.



# தென்கிழக்குப் பல்கலையில் விஞ்ஞான ஆராய்ச்சி மாநாடு

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சம்மாந்துறையில் அமைந்திருக்கும், பிரயோக விஞ்ஞான பீடத்தில் 'நிலையான கண்டுபிடிப்புகளுக்கான தரவு சார்ந்த அறிவியல் ஆராய்ச்சி' எனும் தொனிப்பொருளில் பத்தாவது வருடாந்த விஞ்ஞான ஆராய்ச்சி மாநாடு, பீடத்தின் கேட்போர் கூடத்தில் சூம் தொழினுட் பத்தினூடாகவும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பீடாதிபதி கலாநிதி யூ.எல். செய்னுடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டு உரையாற்றிய அதேவேளை, ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய நூலை ஏற்பாட்டுக்குழுவினர் சூழ, பீடாதிபதி உபவேந்தருக்கு வழங்கிவைத்தார். நிகழ்வின் ஏற்பாட்டாளர் கலாநிதி எம். சி. அலிபுட்டோவின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம பேச்சாளரை பேராசிரியர் ரோஹான் சமரஜீவாவை அறிமுகம் செய்துவைத்தார்.

பின்னர் 'நிலையான கண்டுபிடிப்புகளுக்கான தரவு சார்ந்த அறிவியல் ஆராய்ச்சி' எனும் தலைப்பில் பேராசிரியர் ரோஹான் சமரஜீவா தனது பிரதான உரையை நிகழ்த்தினார். குறித்த விஞ்ஞான ஆராய்ச்சி மாநாட்டில் 8 அமர்வுகளில் 44 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. முதல் அமர்வின் இறுதியில் விழாக்குழுச் செயலாளர் கலாநிதி பி.வி. எச்.கே.ரணசிங்க நன்றியுரை நிகழ்த்தினார்.

இரண்டாவது அமர்வின்போது சிறப்புப் பேச்சாளரான ஜப்பான் Hokkaido பல்கலைக்கழகத்தின் துணைப் பேராசிரியர் கலாநிதி டபிள்யு.எம்.சி.சமீரவை கலாநிதி பி.வி.எச்.கே.ரணசிங்க அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் துணைப் பேராசிரியர் கலாநிதி டபிள்யு.எம்.சி.சமீர தனது சிறப்புரையை நிகழ்த்தினார்.

நிகழ்வில் கட்டுரையாளர்கள் சூம் தொழினுட்பத்தினூடாகக் கலந்துகொண்ட அதேவேளை உபவேந்தர், பீடாதிபதி, நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள், திணைக்களங் களின் தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட பிரதி நூலகர் மற்றும் விரிவுரையாளர்கள் என பலரும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டனர்.

# இழப்புகள் தொடர்பாக சிந்திப்போமானால் நாம் கோழைகளாக மாறும் நிலை வரும்!

## மட்டு. அரச அதிபர் கே.கருணாகரன் 'அட்வைஸ்'

இழப்புகள் தொடர்பாகச் சிந்தித்துக் கொண்டு இருப்போமானால் நாங்கள் முன்னேற்றமடையாதவர்களாகவும் கோழைகளாகவும் மாறும் நிலையே உருவாகும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தில் தொழிற்படையின் ஆற்றல்கள், திறன்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுமிக்க மனிதவளத்தை வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, தற்போதைய அரசாங்கத்தின், ஜனாதிபதியின் தேசிய கொள்கை பிரகடனமாகிய 'சுபீட்சத்தின் நோக்கு ' கொள்கைத் திட்டத்தில் தொழிற்படையின் ஆற்றல்கள், திறன்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுமிக்க மனிதவளத்தை வலுவூட்டுகின்ற அடிப்படையில் உலகளாவிய மட்டத்திலான தொழிற்படையை இலங்கையில் உருவாக்கும் நோக்கில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் தேசிய தொழில் வழிகாட்டல் வாரம் நிகழ்வு கடந்த ஒக்ரோபர் 04 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நாடளாவிய ரீதியாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொவிட் நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, நிகழ்நிலை மூலமாக நடைபெற்றிருந்தன.

'நாட்டிற்குச் சுமை இல்லாத உழைக்கும் தலைமுறை' எனும் தொனிப்பொருளில் 'தொழில் வழிகாட்டலை சமூகமயமாக்குதல்' எனும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு தேசிய தொழில் வழிகாட்டல் வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சு, சித்திரம் மற்றும் வினாவிடைப் போட்டி என்பன நடைபெற்றிருந்தன.

இப்போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் வெற்றிபெற்று மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த சாதனையாளர்களையும், மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கான பணப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், மட்டக்களப்பு வலய கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கொவிட் காலப்பகுதியில் பல்வேறு மன அழுத்தங்களுக்குள்ளும் ஆளாகியிருந்த மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளும் ஆர்வத்துடன் தேசிய தொழில் வழிகாட்டல் போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர், சாவகச்சேரி – தனங்களப்பு பகுதியிலுள்ள பண்ணை வீட்டில் இருந்து சடலமாக நேற்று (புதன்கிழமை) கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் வடக்கு, ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவபாலன் என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், தனங்களப்பு – தென்னம் தோட்டம் ஒன்றைப் பராமரித்து வருகின்றமையுடன், தோட்டத்துடன் இணைந்த வீட்டில் வசித்தும் வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக அவரின் நடமாட்டத்தை அயலவர்கள் அவதானித்து இருந்த நிலையில், நேற்றையதினம் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, அவர் உயிரிழந்த நிலையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும் இவர், சில தினங்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. மேற்படி சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# புதிய களனி பாலத்துடன் தொடர்புடைய வீதிகளுக்கு முறையான போக்குவரத்து வீதித் திட்டம் அறிமுகம்

கொழும்பு, டிசெ. 02

புதிதாகத் திறக்கப்பட்டுள்ள களனி பாலத்துடன் தொடர்புடைய வீதிகளுக்கு முறையான போக்குவரத்து வீதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ்.வீரகோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அதிவேக நெடுஞ்சாலைகளில் அனுமதிக்கப்படும் வாகனங்கள் மட்டுமே புதிய களனி பாலத்தைக் கடக்க அனுமதிக்கப்படும்.

அத்துடன் துறைமுக வீதியை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றமையால், தற்போது உரிமம் பெற்ற வாகனங்கள் மாத்திரமே அந்த வீதியில் அனுமதிக்கப்படுகின்றன.

இதேவேளை கொழும்பு நோக்கி வருகின்ற ஏனைய வாகனங்கள், துறைமுக நுழைவாயிலுக்குள் பிரவேசிக்காமல், சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் இடது அல்லது வலமாகத் திரும்ப வேண்டும்.

மேலும், புதிய களனி பாலத்தில் பயணிக்க அனுமதிக்கப்படாத கொள்கலன்கள் உட்பட ஏனைய அனைத்து வாகனங்களும், பாலத்துக்குக் கீழே உள்ள பேஸ்லைன் வீதியில் பிரவேசித்து, பாலத்துக்கு வெளியே உள்ள பாதையை பயன்படுத்த முடியும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2021 இல் வெளியிடப்பெற்றது.